முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இலட்சியத் தலைவி, கடல்கோடி சென்று இந்த நாட்டிற்காக அன்னியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய மீனவர்களுடைய நண்பன், காடு களைந்து கழனி திருத்தி, மேடுபள்ளங்களைச் சமன் செய்திருக்கின்ற விவசாயிகளுடைய உத்தமத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எடுத்துச் சென்று எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுக்க முடியும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தை சரித்திரத் தமிழகமாக மாற்றிக்கொண்டிருக்கின்ற என் தாய்க்கும் நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

249—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***42374 திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் கிராம ஊராட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றார் அவ்வை*

பிராட்டி. திசையெல்லாம் ஒன்றுகூட்டி, ஓரிடத்தில் அணிவகுத்து, உலகத்தின் முதலீட்டாளர்களை ஒட்டுமொத்தமாக இந்தியாவின் அமைதிப் பூங்காவாம் தமிழ்நாட்டிற்கு வரச்செய்து, 2 இலட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாயை உலகே வியக்கும் வண்ணம் திரட்டி, அமைதி, வளம், வளர்ச்சி என்று சொன்ன சொல்படி, தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத்தை உலகத்தின் உச்சிக்கே கொண்டுசெல்கின்ற ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் கிராம ஊராட்சியில் உள்ள நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவிற்குத் தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் ஊராட்சியில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு, அப்பகுதி நெசவாளர்கள் முன்வந்து முறைப்படி துறைக்குக் கோரிக்கை அளிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகளின்படி, அச்சங்கத்தை அமைத்துத்தர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்களின் உன்னத இருப்பிடமாம் தமிழகம் என்று உலகுக்கு உணர்த்தி சரித்திரம் கண்ட சாதனைத் தாயே, தாயாய் இருந்து தாய் வீட்டுச் சீதனம் தந்த கருணைக் கடலே, உங்களுக்கு ஈடாய் அகிலத்தில் இல்லை ஒரு செல்வம் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மா, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் ஊராட்சிக்குட்பட்ட கேத்தனூரில் சுமார் 200 நெசவாளர் குடும்பங்கள் நெசவுத் தொழில் செய்துவருகிறார்கள். அவர்களது

வாழ்வு வளம்பெற கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக்கொடுக்க ஆவன செய்வேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அதற்கு மனு கொடுக்கப்பட்டு, மறு பரிசீலனையில் உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் பகுதியில் உள்ள நெசவாளர்கள், தற்போது கோவில்வழி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கணபதிபாளையம் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தந்தை பெரியார் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து நெசவு செய்து வருகின்றார்கள். மேலும், கேத்தனூர் ஸ்ரீராமலிங்கா சௌடேஸ்வரி கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் கடந்த 10-10-1984-ல் பதிவு செய்யப்பட்டு, தொடர்ச்சியாகச் செயல்பட்டு வந்த நிலையில், கடந்த ஆட்சிக் காலத்தில், அதாவது 25-1-2007 ஆம் நாளன்று அந்தச் சங்கம் சரிவர செயல்படாத காரணத்தால், சட்ட விதிகளுக்குட்பட்டு கலைக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது மனு செய்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.